பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
13 01 2025 12 40
திங்கட்கிழமை பிற்பகல்
ஆகாஷ்வாணி

***TUNE***

செய்திகள் - வாசிப்பவர் - லட்சுமி

தலைப்புச் செய்திகள்

1. மகா கும்பமேளா திருவிழா இன்று பிரயாக்ராஜில் தொடங்கியுள்ளதை அடுத்து பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

2. போகி, பொங்கல், மகரசங்கராந்தி பண்டிகையை ஒட்டி தலைவர்கள் நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

3. தலைநகர் தில்லியில் நிலவும் கடும் குளிர் காரணமாக 12 ரயில்களின் புறப்பாடு தாமதமாகியுள்ளது.

4. அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீயில் இதுவரை 24 பேர் உயிரிழந்தனர். புகை மாசு காரணமாக அங்கு சுகாதார அவசர நிலை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

5. ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் கேரள அணி – ஒடிசா அணியை எதிர்கொள்கிறது.

*---- இனி விரிவான செய்திகள்---*

<<<<>>>>

மகா கும்பமேளா திருவிழா இன்று பிரயாக்ராஜில் தொடங்கியுள்ளதை அடுத்து பிரதமர் திரு. நரேந்திர மோடி மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்தியில், நாட்டின் தனிச்சிறப்பு மிக்க மாண்புகள் மற்றும் கலாச்சாரத்திற்கு உயிரூட்டும் வகையில் கோடிக்கணக்கான மக்கள் இந்தத் திருவிழாவில் கலந்துகொள்வது தமக்கு மகிழ்ச்சியளிப்பதாக கூறியுள்ளார்.

மகா கும்பமேளா நாட்டின் வளமான ஆன்மிக கலாச்சாரத்தையும், நம்பிக்கையையும், அமைதியையும் வெளிப்படுத்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரயாக்ராஜில் எண்ணற்ற மக்கள் புனித நீராடி இறைவனின் ஆசியைப் பெறுவது தமக்கு மகிழ்ச்சியளிப்பதாக கூறியுள்ளார்.

கும்பமேளாவுக்கு வரும் அனைத்து யாத்ரீகர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் இந்தத் திருவிழாவை மகிழ்ச்சியுடன் தங்கியிருந்து கொண்டாட வேண்டும் என வாழ்த்துவதாக அவர் கூறியுள்ளார்.

இந்தியாவின் ஆன்மிக கலாச்சாரத்தின் பெருமைமிக்க மாண்புகளை வெளிப்படுத்தும் இந்தத் திருவிழா, மக்களிடையே ஆற்றலையும், உற்சாகத்தையும் மேம்படுத்தட்டும் என்று பிரதமர் திரு. நரேந்திர மோடி வாழ்த்தியுள்ளார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி ஜம்மு-கஷ்மீரின் **Sonamarg** சுரங்கப் பாதையை இன்று நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

ஸ்ரீநகரில் இருந்து லே செல்லும் சாலையில் அனைத்து பருவ காலங்களிலும் செயல்படும் வகையில் இந்த சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளது.

சுரங்க திறப்பு விழாவில் பங்கேற்கும் பிரதமர், பணியில் ஈடுபட்ட ஊழியர்களையும் சந்தித்துப் பேச உள்ளார்.

12 கிலோ மீட்டர் நீளமுள்ள இந்த சுரங்கப் பாதை 2 ஆயிரத்து 700 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

பிரதான சுரங்கப்பாதை, ஒரு வெளியேறும் சுரங்கப்பாதை மற்றும் அணுகுச் சாலையை உள்ளடக்கியுள்ளது.

வழக்கமாக உள்ள சாலையில் அடிக்கடி நிலச்சரிவு மற்றும் பனிச்சரிவு ஏற்படுவதால் போக்குவரத்து பாதிக்கப்பட்டு வந்தது.

ஆனால் தற்போது சுரங்கப்பாதை அமைக்கப்பட்டுள்ளதால், இயற்கை சீற்றங்களின்போதும், போக்குவரத்து தடையின்றி நடைபெறுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் ஜம்மு-கஷ்மீர் யூனியன்பிரதேசத்தில் வர்த்தகர்களும், சுற்றுலா செல்லும் பயணிகளும் பயனடைவதோடு, குளிர்கால சுற்றுலா மற்றும் சாகச விளையாட்டுகள் அதிகரித்து உள்ளூர் மக்களின் வாழ்வாதாரம் மேம்படும் என்று கருதப்படுகிறது.

<<<<>>>>

தமிழகத்தின் போகி பொங்கல் என்றழைக்கப்படும் மகரசங்கராந்தி, லொஹ்ரி மற்றும் மகா பிஹு பண்டிகையை ஒட்டி குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு நாட்டு மக்களுக்கு தமது வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

நாட்டின் வளமான கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் இந்தப் பண்டிகைகள், நாட்டு மக்களின் வேற்றுமையில் ஒற்றுமை என்ற சிந்தனையை வெளிப்படுத்துவதாக கூறியுள்ளார்.

அயராது வயல்களில் பாடுபட்டு நமக்கு உணவளித்த உழவர் பெருமக்களுக்கு நன்றி தெரிவிக்கும் நன்னாளாகவும் இந்த பண்டிகை கொண்டாடப்படுவதாக குடியரசுத்தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பண்டிகைகள் மக்களிடையே மகிழ்ச்சியையும், வளத்தையும் ஏற்படுத்தட்டும் என்று குடியரசுத்தலைவர் தமது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர் பொங்கல், மகரசங்கராந்தி, லொஹ்ரி பண்டிகையை ஒட்டி விடுத்துள்ள செய்தியில் நாட்டு மக்கள் அனைவரும் வெவ்வேறு பகுதிகளில் இந்த அறுவடைத் திருவிழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாடி வருவதாகத் தெரிவித்துள்ளார்.

தொண்மை சிறப்பு மிக்க இந்த அறுவடைத் திருநாள் மக்கள் மனதில் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாக கூறியுள்ளார்.

பொங்கல் பண்டிகை இனிப்பான தருணத்தையும், மகிழ்ச்சியையும் ஏற்படுத்துவதாகவும் குடியரசு துணைத்தலைவர் தெரிவித்துள்ளார்.

உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா விடுத்துள்ள லொஹ்ரி வாழ்த்துச் செய்தியில், மக்களிடையே எழுச்சியையும், உற்சாகத்தையும் இந்தப் பண்டிகை ஏற்படுத்துவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் வாழ்வில் மகிழ்ச்சியும், முன்னேற்றமும் திளைக்க வாழ்த்துவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

குஜராத்தில் நடைபெற்று வரும் சர்வதேச பட்டம்விடும் திருவிழாவின்போது சீன மாஞ்சா நூலைப் பயன்படுத்துவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருவிழாவால் பொதுமக்கள் மற்றும் உயிரினங்களுக்கு காயங்கள் ஏற்படுவதை தடுக்கும் நோக்கில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்த விலங்குகள் மற்றும் பறவைகளுக்கு சிகிச்சை அளிக்க கருணை இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது.

இதில் அரசு நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் இணைந்து காயமடைந்த விலங்குகள் மற்றும் பறவைகளை மீட்டு சிகிச்சை அளித்து வருகின்றனர்.

400 கோடி ரூபாய் அளவுக்கு இந்தக் காற்றாடி தொழில் அம்மாநில உள்ளூர் பொருளாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கிறது.

இந்த சர்வதேச திருவிழாவில் இந்தியாவின் 11 மாநிலங்களைச் சேர்ந்த 52 வீரர்கள் உட்பட 47 நாடுகளைச் சேர்ந்த 143 பட்டம் விடும் வீரர்கள் இதில் பங்கேற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

பொங்கல் பண்டிகையை ஒட்டி 3 ஆயிரத்து 186 தமிழக காவல் மற்றும் சீருடைப் பணியாளர்களுக்கு பொங்கல் பதக்கங்கள் வழங்க முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார்.

காவல்துறை மற்றும் சீருடைப் பணியாளர்களின் சிறப்பான சேவையை அங்கீகரித்து ஊக்குவிக்கும் வகையில் இந்தப் பதக்கங்கள் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காவல்துறையினர், தீயணைப்பு மற்றும் மீட்புப் படையினர், காவல் வானொலி பிரிவு, மோப்ப நாய் படைப் பிரிவு மற்றும் புகைப்படக் கலைஞர்கள் உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் அதிகாரிகள் மற்றும் அலுவலர்களுக்கு அவரவர் நிலைகளுக்கு ஏற்ப பதக்கங்களுடன் மாதாந்திர பதக்கப் படியும் பிப்ரவரி மாதம் முதல் வழங்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

பொங்கல் பண்டிகையை முன்னிட்டு சென்னை எழும்பூர் - மதுரை இடையே முன்பதிவில்லா சிறப்பு ரயில் இன்று பிற்பகல் மணி 2.15க்கு இயக்கப்பட உள்ளதாக தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

தாம்பரம் - செங்கல்பட்டு - விழுப்புரம் - திருச்சிராப்பள்ளி – திண்டுக்கல் மார்க்கமாக இந்த ரயில் மதுரை சென்றடையும்.

மற்றுமொரு சிறப்பு ரயில் பொங்கல் பண்டிகை மற்றும் சபரிமலை செல்லும் பக்தர்களின் வசதிக்காக இன்றிரவு மணி 11.45க்கு சென்னை எழும்பூரில் இருந்து திருவனந்தபுரம் கொச்சிவேலிக்கு இயக்கப்பட உள்ளது.

விழுப்புரம், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில் வழியாக இந்த ரயில் திருவனந்தபுரம் செல்லும்.

கொச்சிவேலியில் இருந்து நாளை மறுநாள் விஜயவாடாவுக்கு இயக்கப்படும் சிறப்பு ரயில் கொல்லம், கோட்டயம், பாலக்காடு, போதனூர், ஈரோடு, சேலம் வழியாக பெரம்பூர் - கூடுர் மார்கத்தில் விஜயவாடா செல்கிறது.

<<<<>>>>

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் பகுதியில் கடந்த ஒருவார காலமாக கட்டுக்கடங்காத காட்டுத் தீ காரணமாக இதுவரை 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

சுமார் 40 ஆயிரம் ஏக்கர் பரப்பளவு முழுவதும் தீயில் எரிந்து நாசமானது.

அமெரிக்காவின் கலிஃபோர்னியா மாகாணம் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரின் **Palisades** பகுதியில் கடந்த 7ஆம் தேதி பரவத் தொடங்கிய காட்டுத் தீயினால் பல லட்சம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட குடியிருப்புகள் வெளியேற உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தக் காட்டுத் தீயின் புகை காரணமாக பலவிதமான சுவாசக் கோளாறு ஏற்படக்கூடும் என்பதால் அமெரிக்க பொது சுகாதாரத்துறை அவசர நிலையை அறிவித்துள்ளது.

<<<<>>>>

ரஷ்ய சிறைகளில் உள்ள யுக்ரைன் நாட்டவர்களுக்கு பதிலாக தாங்கள் சிறைபிடித்து வைக்கப்பட்டுள்ள வடகொரியாவைச் சேர்ந்த 2 பேரை ஒப்படைக்க யுக்ரைன் அதிபர் திரு. வோலோடிமிர் ஜெலன்ஸ்கி ஒப்புக்கொண்டுள்ளார்.

இதுகுறித்து தமது சமூக வலைதளப் பதிவில், காயமடைந்த வடகொரிய வீரர்களின் காணொலிக் காட்சியை அவர் வெளியிட்டுள்ளார்.

யுக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் போரில் வடகொரிய வீரர்கள் சுமார் 11 ஆயிரம் பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், இதுவரை 100 வீரர்கள் உயிரிழந்துள்ளதாகவும், ஆயிரம் பேர் காயமடைந்துள்ளதாகவும் தென்கொரிய உளவு நிறுவனம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

வட இந்தியாவில் தொடர்ந்து கடும் குளிர் நீடிக்கிறது.

இதன் காரணமாக பல மாநிலங்களில் அதிகாலை அடர்த்தியான பனிமூட்டம் காணப்பட்டதால் இன்றும் விமானம் மற்றும் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

தலைநகர் தில்லி மற்றும் புறநகர்ப் பகுதிகளில் கடுமையான பனிமூட்டம் காரணமாக விமானம் மற்றும் ரயில் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

தில்லியில் இருந்து புறப்படும் 12 ரயில்கள் 2 மணி நேரம் தாமதமாக புறப்பட்டன.

திருத்தியமைக்கப்பட்ட கால அட்டவணைப்படி அங்கு ரயில்கள் இயக்கப்படுகின்றன.

ஜம்மு-கஷ்மீர், லடாக் மற்றும் ஹிமாச்சலப்பிரதேசத்தின் சில பகுதிகளில் பூஜ்ஜியம் டிகிரி செல்சியஸ் அளவில் குளிர் நிலவியது.

உத்தராகண்ட் மாநிலத்தில் ஒன்று புள்ளி 5 டிகிரி செல்சியசாகவும், வடமேற்கு, மத்திய மேற்கு, கிழக்கிந்திய மாநிலங்களில் 5 டிகிரி செல்சியசாகவும் குளிர் பதிவாகியுள்ளது.

இந்நிலையில் தென்மேற்கு வங்கக் கடல் பகுதியில் நிலவும் வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் கேரள அணி – ஒடிசா அணியை எதிர்கொள்கிறது.

---------------

உலகக்கோப்பை கோகோ போட்டி புதுதில்லியில் உள்ள இந்திரா காந்தி விளையாட்டு அரங்கில் இன்று தொடங்குகிறது.

இன்றிரவு மணி 8.30க்கு நடைபெற உள்ள முதல் ஆட்டத்தில் இந்தியா – நேபாள் அணியை எதிர்கொள்கிறது.

வரும் 19ஆம் தேதி வரை நடைபெற இந்தப் போட்டியில் 20 ஆடவர் அணிகளும், 19 மகளிர் அணிகளும் பங்கேற்கின்றன.

இந்தியாவைத் தவிர நேபாள், பெரு, பிரேசில், பூடான், மலேசியா, ஈரான், கொரியா உள்ளிட்ட நாடுகள் இப்போட்டியில் கலந்துகொள்கின்றன.

---------------

மகளிர் ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் பெங்கால் அணி – சூர்மா அணியை எதிர்கொள்கிறது.

இன்றிரவு 8.15 மணிக்கு நடைபெறும் ஆடவர் ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் தமிழ்நாடு அணி – தில்லி அணியை எதிர்கொள்கிறது.

<<<<>>>>